தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௰௬சு	மலர்
சகூ	இராட்சச, ஐப்பசி (1975 — அக்டோபர் — நவம்பர்)	எ

வினையடைப் பெயர்கள்

டாக்டர் மோ இசரயேல்,

மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை - 21.

தமிழில் உள்ள சொற்களைப் பெயர், வினை, இடை, உரி, என நான்காகப் பகுத்தனர் இலக்கண நூலார். இக்கால மொழியியல் அறிவு வளர்ச்சி, தமிழ்ச் சொற்களைப் பெயர், வினை, பெயரடை (adjective), வினையடை (adverb), ஒருநிலைச்சொல் (particle) என ஐந்து வகைகளாகப் பகுக்கத் துணை செய்கின்றது.

பெயர்ச்சொற்களைப் பின்வரும் உட்பிரிவுகளாகப் பகுத்துக் காணலாம். 1. பெயர், 2. மாற்றுப் பெயர், 3 எண்ணுப் பெயர், 4. இடவேறுபாடு உணர்த்தும் ஆக்கப்பெயர் (appellative noun) 5. வினையாலணையும் பெயர் (participial noun) 6. தொழிற் பெயர் (verbal noun) 7. பண்பு பெயர் (qualitative noun) 8. வினையடைப் பெயர் (adverbial noun) இவற்றுள், இறுதியாகக் குறிப்பிட்டுள்ள வினையடைப் பெயர்களின் இயல்புகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்

ஒரு மொழியின் சொற்களைப் பாகுபாடு செய்யுங்கால் முதற்கண் சொற்களின் அமைப்பு அடிப்படையில் அவற்றை வேறுபடுத்திக் காண்கிறோம். அதாவது அவை உருவன் நிலையில் (morphological leval) வேறுபாட்டுருவனை (inflexenial morpheme) ஏற்கின்றமையில் என்னென்ன ஒற்றுமை வேற்றுமைகள் உடையனவாக உள்ளனவென்று கண்டு பகருகின்றோம் அடிப்படையான பாகுபாட்டை சொற்களின் வடிவ அடிப்படையில் இங்கே செய்து கொள்ள முடியும். எனினும் இவ்வாறுன

பகுப்பில், சில சொற்களை முழு அளவில் வரையறுத்துப் பகுத்தல் இயலாது. எடுத்துக்காட்டாகத் தமிழில் வினையாலணையும் பெயர்கள் வினையின் இயல்பாகிய காலங்காட்டல், பெயரின் இயல்பாகிய வேற்றுமை ஏற்றல் / எழுவாயாக வருதல் ஆகிய இரண்டையும் கொண்டுள்ளன. இத்தகையச் சொற்களைத் தொடர் நிலையில் தான் முழு அளவு முடிவு கட்ட முடியும். எனவே சொற்களைப் பாகுபாடு செய்ய அவற்றின் வடிவம் (form), செயல் (function) ஆகிய இரண்டினையும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

முன்னர் வினையடைப் பெயர்கள் என்று குறிப்பிட்ட பெயர்ச் சொற்களைப் பற்றித் தமிழ் இலக்கண நூலார் மிகுதியாக விளக்கம் தந்திலர் பிற்கால இலக்கண ஆசிரியர்களும் இவற்றைத் தெளிவு படுத்திக் கூறவில்லை பிற்கால இலக்கண அறிஞர் சிலர் இவற்றை ஒரு நிலைச்சொற்கள் (Particles) என்று கருதியுள்ளனர் [1]. தமிழ் மொழியில் மட்டுமன்றி, ஏனைய எல்லாத் திராவிட மொழிகளிலும் இவை பெரும் அளவில் ஆட்சி பெற்றுள்ளன [2]. இவை எளிதில் பாகுபடுத்தி வரையறுத்துச்சொல்ல இயலாத இயல்புகள் உடையனவாக உள்ளன. எனவே பழந்தமிழ் இலக்கண நூலார் பெயர் வினை, இடை, உரி ஆகிய வற்றில் ஒன்றில் அடக்கிக் கூறுமலும். பிற்கால இலக்கண அறிஞர் சிலர் ஒரு நிலைச்சொற்கள் கூறியும் உள்ளனர் இன்று இவற்றுள் பல முழுத்தன்மை இழந்த குறைச்சொற்களாகவே காணப்படுகின்றன [3].

வினையெச்சங்களை ஒன்பது வகை வாய்ப்பாடுகளாகக் (தொல்சொல் 225) கூறிய தொல்காப்பியனார், தொடர்ந்து

பின்முன் கால்கடை வழிஇடத்து என்னும்
அன்ன மரபின் காலங் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே
(தொகைசொல். 226)

என்னும் நூற்பாவினைத் தந்துள்ளார். இதற்குச் சேனாவரையர்,

'பின்னும் முன்னும், காலும், கடையும், வழியும், இடத்தும் என்னும் ஈற்றனவாய் வருவனவும், அவைபோலக் காலங் கண்ணி வருவன பிறவும், வினையெச்சம் என்று உரை விளக்கம் தருகிறார் சேனாவரையர் 'ஈற்றனவாய் வருவன' என்று கூறுவது குறிப்பிடத்தக்கது இவற்றின் வழக்கிற்குப் பின்வரும் எடுத்துக் காட்டுக்களைத் தரலாம்.

வந்தபின், வராமுன், வந்தக்கால் வந்தக்கடை, வந்தவழி, வந்தவிடத்து தொல் காப்பியனார் 'அன்ன மரபின் காலங் கண்ணிய என்ன கிளவியும்,' என்கின்றமையால் இவை காலங் குறிப்பன என்பதே அவர்க்கு உடன்பாடு. நுணுகி ஆயின், வந்தபின், வருமுன், வந்தக்கால், வந்தக்கடை, வந்தவழி, வந்த விடத்து ஆகியன போன்ற தொடர்களில் இவை காலத்தை மட்டும் குறித்து நிற்க, பிற இடங்களில் இவை காலம், இடம் ஆகிய இரண்டையும் உணர்த்துவனவாக வழங்குகின்றன.

பின் வந்தோன் பின் வீடு, பின்னவன், என்பின் வந்தான், பின்பக்கம், பின்னால் வருவேன், பின்னால் அமர்க, பின்னுக்குச் செல்லாதே பின்னால் செல், பின்னர் வருவாய், பின்னாலே இருக்கிறது

இவற்றில் 'பின்' காலம், இடம் ஆகியவை உணர்த்துதல் காண்க. இவை போன்றே பிறவற்றினையும் காணுதல் இயலும். எனினும் காலப் போக்கில் ஏற்பட்டுள்ள குறைச்சொல் தன்மை சிலவற்றின் நிலையினை மாற்றிவிட்டது [4]

இப்படிப்பட்ட வேறு சில சொற்களையும் இவண் தொகுப்போம். கீழ் போது, முதல், அப்பால், இப்பால், உள், வெளி, அப்புறம் மேல், இப்புறம், ஞான்று, கண், புறம், அகம், உழை, சார், அயல்புடை, தலை, என்று, நேற்று, இன்று, முந்தி, நாளை, அல்கு, அவண், இடை முதலியன. இவை யாவும் காலம் / இடம் உணர்த்தும் பெயர்களே.

இவற்றின் பிற இயல்புகள் சிலவற்றைக் காண்போம். காலம் ஏற்காமையும் வேற்றுமை ஏற்றலும் பெயரின் அடிப்படை இயல்புகள் பெயர்ச்சொற்கள் எழுவாயாக வருகின்றன ; எண்-பால் வேறுபாடுடையன தொடரில் அவை பெயரெச்சம், பெயரடை ஆகியவற்றால் தழுவப்படும் ; பெயரடையாகச் செயலாற்றலும் உண்டு. மேற் கூறப்பட்ட சொற்களில் பல வேற்றுமை உருபுகளில் சிலவற்றை ஏற்று வேற்றுமை உணர்த்துகின்றன.

பின்னால் வந்தான் பின்னுக்கு பின்னால்
முன்னுக்கு வருவான் முன்னுக்கு முன்னால்
வெளியில் சென்றான் வெளிக்கு வெளியில்
இன்றைக்கு வந்தான் இன்றைக்கு, இன்றையில்
முதற்கண் வந்தான் முதற்கண்

அகத்தில் சென்றான் அகத்தில்
அவன் உழையில் சென்றான் உழையில்

மேலும், இவற்றில் சில பிறபெயர்களைப் போன்று சாரியை ஏற்கின்றன. தொல்காப்பியனார் எழுத்து, சாரியை என்று வேறுபடுத்திக் காண்பதனை (தொல் எழு. 112) இவண் ஒரே சொல்லால் சாரியை எனக் குறிப்பிடுதும்.

நேற்றைக்கு	நேற்று — ஐ — கு	5
இன்றைக்கு	இன்று — ஐ — கு	5
புறத்து	புறம் — (அ)த்து	
(வந்தக்) காலை	கால் — ஐ	
இடத்து	இடம் — (அ)த்து	

பின்னால். முன்னால், நாளைக்கு, இன்றைக்கு போன்றவற்றில் அமையும் ஆல், கு என்பன தொல்காப்பியனார் கொள்கைப்படி வேற்றுமை உருபுகளா அன்றேல் சாரியைகளா என்பது ஆய்வுக்குரித்து. [6] பெயரை ஒட்டி வினைக்கு அல்லது பெயருக்கு முன்னர் வரும் சாரியைகள் வேற்றுமைப் பொருள் உடையனவாகவே அமைகின்றன என்பது கருதத்தக்கது.

ஆகவே அடிப்படை அமைப்பில் இச்சொற்கள் காலம், இடம் உணர்த்தும் பெயர்களே எனினும் இவை பெரும்பாலும் எழுவாயாக வருவதில்லை; எண் வேறுபாடு உடையன அல்ல; ஒன்று, இரண்டு ஆகியன போன்ற எண்ணுப் பெயரடைகளை ஏற்பதில்லை

தொடர் நிலையில் ஏனைய பெயர்ச்சொற்கள் பெயரெச்சம், பெயரடை ஆகியவற்றால் தழுவப்படுகின்றன; ஆனால் இவை பெயரெச்சத்தால் மட்டுமே தழுவப்படுகின்றன. [7]

எ — கு	மறைந்த பின்
நல்ல தலைவர்	மறைந்தக் கால்
பெருந் தலைவர்	மறைந்த விடத்து
மறைந்த தலைவர்	வந்த ஞான்று

பிற பெயர்ச் சொற்கள் கூட்டுச் சொற்களில் (Compounds) பெயரிடைகளாகச் செயலாற்றுகின்றமை போன்று இவைகளில் பெரும்பான்மையானவையும் செயலாற்றுகின்றன.

எ — டு

கல் வீடு	பின் வீடு
மலை அருவி	முதல் வீடு
காயா மலர்	வெளி இடம்
குன்றக் கூகை	உட்புறம்
முறஞ்செவி	புறவேலி
யானைக்கோடு	கீழ்மனை
சாரைப் பாம்பு	மேன்மாடி
மழலைச்சொல்	நாளைய உணவு
	இன்றைய வாழ்வு
	உடன் பிறப்பு
	அக வாழ்வு

எனினும், கூட்டுச்சொற்களில் முதல் வரிசையில் அமைந்துள்ளவற்றின் நிலைமொழி, வருமொழி ஆகிய உறுப்புக்கள் பல்வேறு பொருள் தொடர்புகளுடன் அமைய, இரண்டாம் வரிசைச் சொற்களின் உறுப்புக்கள் ஏறத்தாழ ஒரே வகையான பொருள் தொடர்புகள் அமைவது காணத்தக்கது.

எனவே, இவ்வாறு காலம் இடம் உணர்த்தும் பெயர்கள் சில எண் வேறுபாடு ஏற்காமல் ஒரு சில வேற்றுமை உருபுகளை ஏற்றுச் செயலாற்றுகின்றன. அமைப்பில் அவை பெயர்களே, ஆனால் தொடர் நிலையில் அவை ஓரளவு பெயர்களாகக் காணப்பட்டு. பெரும் அளவில் வினையசைகளாகவும் செயலாற்றுகின்றன. எனவே தான் இவற்றை வினையடைப் பெயர்கள் எனக் குறிப்பிட்டனம்

எ — டு நீ முன்னுக்கு வரவேண்டும்
அவன் நேற்று வந்தான்
நீ வந்த பின் நான் செல்வேன்
அவன் கீழே விழுந்தான்
நீ என்றைக்கு வருவாய்?

வந்தபின், வந்தக்கால், வந்தக்கடை இம்மூன்று தொடர்கள் வருமொழியில் வல்லினம் முதலன பின்னிரண்டு தொடர்களில் வல்லினம் மிக முன்னதில் மிகாமை காணலாம் 'வந்த' என்னும் சொல் பெயரெச்சமாகக் கொள்ளப்படின்,[8] தொல்காப்பியர் இலக்கணம் வலி மிகாது இயல்பாகும் அகர வீற்றுச் சொற்கள் வரிசையில் 'செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும்' (தொல். எழு 20) என்று குறிப்பிட்டு, பெயரெச்சத்தின் முன் வலிமிகாமையினை வலியுறுத்த வந்தக்கால், வந்தக்கடை என்

னும் தொடர்களில் வலிமிகுவது காலப்போக்கில் கால், கடை என்னும் சொற்கள் முழுச்சொல் நிலையினை இழந்தமையினையே உறுதிப்படுத்துகின்றது எனலாம் வருமொழி நிலைமொழியுடன் ஒன்றுபட்டு இணைந்து செயல்படத் தலைப்பட்டு விட்டது

திராவிட மொழிகளில் இவ்வகையான வினையடைப் பெயர்கள் சில பின்னிணைகளாகச் செயலாற்றுகின்றன. பின்னிணைகள் பெரும்பாலும் பெயர்களின் உருபேற்கும் வடிவங்களின் (Oblique forms) பின் வருகின்றன.

எ — டு வீட்டின் பின், என்முன், உன்பின், வீட்டின்மேல், வீட்டின் உள், தமையன் உழை, கொல்லைப்புறம் முதலியன.

தொல்காப்பியனார் ஏழாம் வேற்றுமைக்குக் கொடுக்கும் சொற்கள் பெரும்பாலும் வினையடைப் பெயர்களே. இவற்றை இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோர் வேற்றுமை உருபுகள் என்று கருத, ஏனைய உரையாசிரியர்கள் தனிச் சொற்கள் என்று கருதுகின்றனர்.

மேலும், சுட்டு, வினாவடியாக அமையும் சில சொற்களையும் வினையடைப் பெயர்கள் எனக் கொள்ளுதல் இயலும்.

எ — டு
இன்று அன்று என்று
இங்கு அங்கு எங்கு
இப்பொழுது அப்பொழுது எப்பொழுது
இவண் அவண் எவண்
இங்கண் அங்கண் எங்கண்

இவற்றை வினையடைகள் (adverbs) என்று கொள்வதை விட வினையடைப் பெயர்கள் என்று கொள்ளுதலே சாலப் பொருந்தும். இவற்றுள் சில வேற்றுமை உருபையும் பொருளையும் உள்ளடக்கி நிற்றல் காண்க.

தொடர் நிலையில். வந்தபின். வாராமுன் போன்றவை வினையடைத் தொடர்களே (Adverbial Phrase) எனினும் உறுப்பு நிலையில் (Constituent structive) இவை பெயர்த்தொடர்களே (Noun Phrase) இவை வினைமுற்றினைப் பெயரெச்சமாக மாற்றிக் கொண்ட பின், அப்பெயரெச்சத்தை அசையாகக் கொண்டு, பெயர் அடை கொளியுடன் (head) அமைந்து நின்று வினையடைத் தொடர்களாகச் செயலாற்றும் பெயர்த் தொடர்கள் ஆகும்.

குறிப்புக்கள்

1. Rhenius, Tamil Grammar, Madras, 1845, pp. 169, 170 Arder A H., A Progressive Grammar of Common Tamil, Madras, 1934, pp. 125.

2. Krishnamurti, Bh , Konda or Kusi. A Dravidian Language Hydrabad, 1969. pp. 244, 245.

3. படி, வரை, மட்டும், புடை, உடன் போன்றவை பெயரின் தன்மையைப் பெரும்பாலும் இழந்து விட்டன.

4 கால், கடை என்னும் சொற்கள் ஏனையவற்றைப் போன்று இடம் உணர்த்தியும், பல்வேறுபட்ட வழக்கிலும் அமைதல் இல்லை.

5. இவண், தொல்காப்பியனர் குகர உருபு ஏழாம் வேற்றுமைப் பொருளாம் காலத்தை உணர்த்தும் என்று குறிப்பிட்டிருப்பது கருதத்தக்கது. (தொல், சொல். 110) நன். 185 தொல் எழு 258 ஒப்பு நோக்குக.

6. தொல், சொல் 110.
ஆன் : தொல். எழு. 124, 247, 286. 331.
இக்கு: தொல் எழு 126, 248, 286.

7. இன்று நேற்று போன்ற சில சொற்கள் பெயரெச்சத்தாலும் தழுவப்படுவதில்லை.

8 Israel, M. The Treatment of Morphologeji in Tolkappiyam, Madurai, 1973, pp. 102—105; 219, 220.

9 தொல். சொல். 82.

சென்ற இதழின் தொடர்ச்சி

"தென்னக மேதையும் சீனத்துச்செம்மலும்"

சி. இராமகிருட்டினன். பி.ஏ., பி. எல்.

அம்மாபெரு மனிதனின் வாழ்க்கையில் நடந்ததாகச் சில சம்பவங்களும், கதைகளும், நிலவி வருகின்றன. அவைகளில் பெருமளவுக்கு உண்மையில்லை யென்பது தெளிவு. சமுதாயத்தை அலைக்கழிக்கும் சாதிப் பாகுபாடுகள், அவர் காலத்திலும், அவருக்கு முற்பட்ட காலத்திலும், இல்லையென்பது சங்க கால வரலாற்றிலிருந்து ஒருவாறு அறியலாம் செய்கின்ற தொழில் வேற்றுமையால் சில பாகுபாடுகள் நிலவி வந்தன. உழுது வாழ்கின்றவனை, உழவன் என்றும், வேட்டையாடுபவனை வேட்டுவன் என்றும், வணிகத் தொழில் செய்கின்றவனை வணிகன் என்றும், கூறுவது செய்கின்ற தொழில் முறையால் என்பதை விளக்கத் தேவையில்லை. வணிகத் தொழில் செய்பவனுடைய மகன், தச்சுவேலையை மேற்கொண்டால் அவன் தச்சன் ஆகின்றான்; அவனே உழவு வேலையை ஏற்றால் உழவன் ஆகின்றான் இந்த நிலை அன்றைய தமிழ் சமுதாயத்தில் வாழ்ந்த அனைவருக்கும் பொருந்தும்.

உலகப் பெரும் சிந்தனையாளர்களின் முன்னோடியான நமது வள்ளுவப் பெருமகன், நல்ல தமிழ்க் குடியில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து உயர்ந்தான் என்பதில் ஐயமில்லை அவன் பிறந்த குடி உயர்ந்ததா, தாழ்ந்ததா என்று இன்றைய சமுதாய அளவு கோலை வைத்துக்கொண்டு ஆராய முயல்வது அர்த்தமற்றது. இன்று அரசியலிலும், பொருளாதாரத்திலும், சமுதாய நிலையிலும், செல்வாக்குடன் மிளிரும் பல குடிகள் பண்டைய நாளில், அந்தப் பெயர்களுடன் இருந்ததாகவே குறிப்புக்கள் இல்லை. அந்தப் பெயர்களை இடைக் காலத்தில் என்றோ தாமாகவே சூட்டிக் கொண்டவைகளாகும்.

இன்று செல்வாக்கின்றியும், தாழ்ந்தவரென்றும் கருதப் படுகின்ற குடிகள், அன்று செல்வாக்குடன் வாழ்ந்த நல்ல தமிழ்ப் பெருங் குடிகளாகவே கருதப்பட்டனர் குறிப்பாக வள்ளுவப் பறையர் என்ற குடி முடி மன்னர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, மன்னர்களின் தொடர்பான விவரங்களை நாட்டு மக்களுக்கு அறிவிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்

என்று தெரிகின்றது. வள்ளுவமுது மகன் என்றும், “ துடியன், பாணன், பறையன், கடம்பனென்றிந்நான்கல்லது குடியுமில்லை” (புறம் 335) என்றும் வரும் குறிப்புக்களிலிருந்து அவர்கள் எந்த அளவுக்குச் செல்வாக்குப் பெற்ற குடி மக்களாக வாழ்ந்தனர் என்பது தெரியக் கிடக்கின்றது.

திருவள்ளுவர், அன்று செல்வாக்குப் பெற்றும், இடைக் காலத்தில் செல்வாக்கை இழந்தும், இன்று தாழ்ந்ததாகக் கருதப்படும், ஒரு நல்ல தமிழ்க் குடியில் பிறந்தவரென்ற கருத்தே வலுப் பெற்றிருக்கின்றது. பிற்காலத்தில் எழுந்த கற்பனைக் கதைகள், சம்பவங்கள், நாம் கொண்ட இந்த முடிவையே உறுதிப் படுத்துகின்றன. பிற்காலத்தில் செல்வாக்குத் தேடிக் கொண்ட சில குடிகள் இத்தகைய பெருமேதையைத் தங்கள் குடியுடன் தொடர்பு படுத்திக் காட்ட முயன்றதின் விளைவே. பேராசானைப் பற்றிய கற்பனைக் கதைகள் எழுவதற்குக் காரணம். பகவன் என்ற பிராமணனுக்கும், ஆதி என்ற புலைச்சி மங்கைக்கும் பிறந்தவரே திருவள்ளுவர் என்பது ஒரு கற்பனைக் கதை சங்க காலத்திலோ, அல்லது அதற்கு முற்பட்ட காலத்திலோ, தமிழகத்தில் வாழ்ந்த எல்லாக் குடியினரும் புலாலை விரும்பி உண்டு வந்தனர். அங்ஙனமிருக்க ஆதியாரை மட்டும் புலைச்சி என்று கூறுவது பொய்யாகும் எனப் பேராசிரியர் அவ்வைத் துரைசாமி அவர்கள் ‘ வள்ளுவர் வரலாறு ’ என்ற கட்டுரையில் தெளிவுபடுத்துகின்றார் அடுத்த கதை வள்ளுவப் பெருந்தகை மார்க்க சகாய முதலியாரின் மகள் வாசுகியை மணந்து வாழ்ந்தார் என்பது. வாசுகி என்னும் வடமொழிப் பெயர் அந்நாளில் தமிழ் நாட்டில் வழங்கிய பெயர் அன்று என்பதே பேராசிரியர் அவர்கள் கருத்து. இன்னும் சில கற்பனைக் கதைகள் நிலவுகின்றன. அவைகளும் உண்மையற்றவை என ஒதுக்கி விடலாம்.

“ அறப்பாடிற்றே, ” “ பொய்யில் புலவன் பொருளுரை, தேராய் ” என்று இலக்கியங்கள், திருக்குறள் கருத்துக்களை சிலாகித்துப் பேசினாலும், பாமர மக்களிடையே அதன் கருத்துக்களும், கோட்பாடுகளும் செல்வாக்குப் பெற முயற்சி எடுக்கப்படவில்லை. புத்தர் வகுத்துச் சென்ற கோட்பாடுகளை அசோகன் போன்ற பெரு மன்னர்கள் தம் வாழ்க்கையிலும் ஏற்றுக் கடைப் பிடித்ததுடன், மக்களும் அவைகளை ஏற்றுப் பயனடைய வேண்டி முயன்றனர் அசோகன், புத்தர் கொள்கைகளை கடல் கடந்து வெளி நாடுகளிலும் பரப்பிய செய்தி

உலக அறிந்ததே. புத்தரது சீடர்களும் அவரது கொள்கை களைப் பரப்புவதில் பெரும் பங்கேற்றனர்.

சீனப்பெருமகன் கன் பூசியசு விட்டுச் சென்ற நெறிமுறை களை, சீன நாட்டு மன்னர்களும், புலவர்களும், சிந்தனையாளர் களும் மக்களைத் திருத்தவும், வாழ்வில் புதிய திருப்பத்தை உண்டு பண்ணவும் பயன்படுத்தினர். அவரது செம்மைசான்ற சீடர்களும் அந்தப் பணியில் ஈடுபட்டு வெற்றி கண்டனர். குரிசில் வீரன் ஏசுவின் புனிதக் கோட்பாடுகள் உலகின் பல பகுதிகளிலும் பரவியதற்குக் காரணம், அக்கோட்பாடுகளை ஆளுவோரும். அறவழியில் நின்ற துறவிகளும் ஏற்றுப் பரப் பியதுதான் என்பது வெள்ளிடைமலை

நபிகள் நாயகம் போதித்த உண்மைகள். பரவ செய்யப் படாத முயற்சிகள் இல்லையென்றே கூறலாம். உலகின் பல மக்கள் அவ்வுண்மைகளை ஏற்றுத் திருந்தியிருக்கின்றனர். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனை சிற்பி கார்ல் மார்க்சு உலகப் பாட்டாளிக்கென உருவாக்கிய பொதுவுடமைத் தத்துவத்தை மையமாகக் கொண்டு மாவீரன் லெனின் பாட் டாளிகளின் அரசை உருவாக்கிக் காட்டினான்.

இங்கனம் மற்ற நாடுகளில் தோன்றிய பெரு மேதைகளின் சிந்தனையில் உருவாகிய கொள்கைகள் பாமர மக்களின் முன் வைக்கப்பட்டு அவர்களின் வாழ்க்கையில் பெரும் மாறுதல்களை உண்டாக்கும் அளவுக்கு வளர்ந்தோங்கி நிற்கின்றன. அந்தச் சீரிய கொள்கைகள் மக்கள் வாழ்வைச் செப்பனிடும் இயக்கங் களாக மாற்றப்பட்டுள்ளன. முடியுடை மன்னர்களும், மூத்த அறிவுடைய பெரு மக்களும், கலை பல கற்ற கலைவாணர்களும், நல்லிசைப் புலவர்களும், மதிநலம் வாய்ந்த வித்தகர்களும், விற்பன்னர்களும், படித்தவர்களும், பாமரர்களும் ஒருங் கிணைந்து ஆர்வத்துடன் செயல்பட்டதின் விளைவே அவ்வியக் கங்கள் வெற்றி பெற்றன.

மேலே சொன்ன சிந்தனையாளர்களுள் தலை சிறந்தவர் என மதிக்கத் தகுந்த மாபெரும் வள்ளுவனது கோட்பாடுகளை வளர்க்க ஏன் இயக்கம் தோன்றவில்லை, பாமர மக்களின் முன் ஏன் வைக்கப்படவில்லை என்ற கேள்விகள் ஆய்வுக்குரியன. பெருந்தகை தன் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர்களைச் சீடர் களாக மாற்றித் தன் கொள்கைகளைப் பரப்பப் பயன்படுத்திய தாகவும் தெரியவில்லை. எந்த மன்னர்களையோ, அல்லது

அமைச்சர்களையோ அணுகித் தனது கோட்பாடுகளை மக்களிடையே பரப்ப அறிவுரை தந்ததாகவும், வரலாறு கூறவில்லை. அல்லது பேராசான் தானே, மக்கள் மன்றங்கள் முன் நின்று, தான் சிந்தித்து உருவாக்கிய பெரும் நெறிமுறைகளைப் பரப்பினார் என்றும் தமிழக வரலாறு காட்டவில்லை.

எந்தக் கொள்கையும் இயக்கமாக வளர அவை தோன்றிய காலச் சூழ்நிலை துணைபுரியும் என்பது தெளிவு. மேலே குறிப்பிட்டபெரும் சிந்தனையாளர்களின் வரலாறுகளையும், அவர்கள் வாழ்ந்த சூழ்நிலைகளையும் ஆராய்ந்தால், அவர்கள் வகுத்துச் சென்ற கோட்பாடுகள், சமுதாயத்தை நலியச் செய்த நச்சு எண்ணங்களுக்கு எதிரானவைகளாகவும், நாட்டைக் கெடுத்த சில தெளிவற்ற இயக்கங்களைச் சிதறடிக்கவும் செயல்பட்டன என்பது விளங்கும். நல்ல மாற்று இயக்கங்கள் தேவையென நாடும் நினைத்தது; மக்களும் விரும்பினர். ஆகவே அவர்களது எண்ணங்கள் வளர நல்ல சூழ்நிலை துணை நின்றது என்பதில் ஐயமில்லை. உடனடியாகப் பரவும் வாய்ப்பையும் பெற்றன.

திருவள்ளுவர் வாழ்ந்தகாலம், கடைச் சங்க காலத்தைச் சேர்ந்தது என்பதை அறிஞர் பெருமக்கள் முடிவு செய்திருக்கின்றனர். சங்காலம் தமிழகத்தின் பொற்காலம். நாட்டையாண்ட வேந்தர்களுக்கும், மக்களுக்கும் பாலமாக அமைந்து செயல்பட்டனர் செந்நாப் புலவர்கள். அன்றைய தமிழக மக்களும், நல்ல பக்குவமுடையவர்களாகவும், எதையும் சிந்தித்து ஏற்றுக்கொள்ளும் பகுத்தறிவுடையவர்களாகவும் இருந்தனர். நாட்டில் குழப்பங்கள் குறைந்திருந்தன, நாட்டை அலைக்கழிக்கும் நச்சுக் கொள்கைகள் வலுப்பெறவில்லை.

— தொடரும்

மெய்மொழி

எஸ். ஆரோக்கியநாதன், எம். ஏ.
மைசூர் — 6

மொழி என்பது பேசப்படுகின்ற ஒன்று என்பதே நம்மில் பலரின் பொதுவான கருத்தாகும். ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள பயன்படுவதே மொழி எனக் கூறுவது மொழியினை அதன் பரந்த நோக்கில் விளக்க முயலுவதாகும். கருத்துப் பரிமாற்றம் பொதுவாக மனிதர்களிடையே பேச்சால் நடந்தேறும். ஆனால் அது ஒன்று தான் கருத்துப் பரிமாற்றத்தின் சாதனமல்ல. எழுத்தும் கருத்துப் பரிமாற்றத்தின் — செய்தி போக்குவரத்தின் ஒரு சாதனமாகும். கடிதம் மூலம் செய்திப் போக்குவரத்து நடைபெறுவதினை இதற்கு சான்றாக கூறலாம். சாலை யோரத்தில் வைக்கப்பட்டுள்ள சில சைகைப் பலகைகள் ஏதோ ஒன்றை அறிவிக்க அதனைப் புரிந்து கொண்டு காரோட்டிகள் வேகத்தை குறைத்தோ அன்றி ஒலி எழுப்பாது நிதானமாக செல்வதோ போன்று அவரது ஓட்டுதலில் சில மாற்றங்கள் ஏற்படுவதை நாம் காணலாம். துறை முகத்தினரோடு கப்பல் மாலுமிகள் கொடிகளை அசைத்தும் சில வேளைகளில் ஒலிகள் மூலமாகவும் கருத்துப் பரிமாற்றம் செய்திப் போக்குவரத்து மேற்கொள்வதை நாம் பார்க்க முடியும் தபால்—தந்தி இலாகாவில் நாம் தருகின்ற தந்திச் செய்திகளை (Telegraphic message) ஒலி அலைகளாய் நாம் விரும்பும் இடத்திற்கு அனுப்பப் படுவதை நாம் காணலாம். விலங்கினங்களும் தங்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக்கொள்ள ஒலிகளை எழுப்பி செய்தி தொடர்பு கொள்வதாக அறிஞர்கள் கருதுகிறார்கள். ஆயினும் நாள்தோறும் வளர்ந்து வரும் அன்றாட தேவைகளுக்கு ஏற்ப முழுமையான அளவில், எல்லா நிலைகளிலும் தடையின்றி வெகு எளிதாகக் கருத்துப் பரிமாற்றம் பேச்சு மொழியால் மனிதர்களிடையே மட்டும் நடைபெறுகிறது மொழி மனிதனின் அரிய கண்டுபிடிப்பாகும் மனித குலத்தின் அன்றாட தேவைகளும் வளர்ச்சிகளும் மொழி வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கிறது ஹெர்டல் எனும் பேரறிஞர் மொழியின் தொடக்கம் மனித உணர்ச்சிகளின் அடிப்படையில் அமைந்தது என்று கூறுகிறார். ஆக உணர்ச்சிகளின் வெளிப்பாடு மொழியியலாக மலர்கிறது. ஆனால் மொழி ஒன்றுதான் உணர்ச்சிகளின் வெளியீட்டு சாதனமா? ஒருவனின் மனதில் ஏற்படுவதுதான் உணர்ச்சிகள் அவைகளை அவனது பேச்

சும் உடலும் வெளிக் காட்டுகின்றன. கோபமாக ஒருவன் பேசுகிறான் என்பதை அவனது பேச்சின் வேகத்தில் மட்டும் நாம் அறிந்து கொள்வதில்லை அவனது முகத்திலிருந்தும் அறிந்து கொள்ள முடியும், "அவன் மகிழ்ச்சியாகத்தான் பேசிக் கொண்டிருந்தான் ஆனால் அவனைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை" என்று சிலர் கூறுவதை நாம் கேட்டிருக்கி றோம் தன் துயரத்தை மறைத்துக் கொண்டு சிரித்துப் பேசு கின்ற ஒருவன் பேச்சளவில் அதை வெளியிட்டாலும் உடலால் அதே பொய்யான உணர்ச்சிகளை அவ்வளவு எளிதாக வெளி யிட இயலாது இருப்பதுதான் இதன் பொருள் வெறும் பேச்சு மட்டுமே நம் எண்ணங்களை வெளியிட்டு விடுவதில்லை. நம் உடலசைவுகளால் அங்கவமைப்புகளால் (Poses) சூழ்நிலை இவைகளால் நாம் பேசுகின்ற பேச்சு அதனுடைய முழுமை யான பொருளை கருத்துப் பரிமாற்றத்தில் செய்தி போக்கு வரத்தில் பெற்று விடுகிறது. பேச்சு வெளியீடு இல்லாமல் நம் உடலால்—உடலசைவுகளால்— அங்கவமைப்புகளால் —கருத்து வெளியீடு நடத்தி செய்தி போக்கு வரத்தினை ஓரளவு நடத்த இயலும். நாம் அடிக்கடி திரைப் படங்களில் "அவள் கண் களால் பேசினாள்" என காதலன் கூறுவதை கேட்டிருக்கிறோம், கண்களால் பேசிட எவ்வாறு இயலும். வாயால்தானே பேச இயலும். காதல் மயக்கத்தில் உளறுவதாக முடிவுகட்ட இய லுமா என்ன! கண்களால் சில கருத்துக்களை வெளியிட முடியும் மற்றவர்களோடு தொடர்பு கொள்ள முடியும். ஓரளவு செய்தி போக்குவரத்துச் சாதனமாக கண்களை பயன்படுத்த இயலும். "வா", "போ", "முடியாது" எனும் கருத்துக்களை கை அசைவுகளால் நாம் காட்டிட இயலும். அவசரமாக போவதை. சிந்தனையில் ஆழ்ந்திருப்பதை அங்க அமைப்பால் நாம் காட்ட முடியும். இவ்வாறு உடல் மூலமாக நாம் செய்தி வரத்தினை ஒரு குறிப்பிட்ட அளவில் மேற்கொள்ள இயலும்.

இவ்வாறு பல்வேறு சைகைகள் மூலம் நடைபெறும் செய்தி பரிமாற்றம் அனைத்தையும் பொருளமைப்பியல் (Semioties) எனும் பிரிவின் கீழ் கொண்டுவந்து ஆய்வுக்கு உட்படுத்தினார், ஜான் லாக் (John Locke) எனும் அறிஞர். இத் துவக்கம் 17 ஆம் நூற்றாண்டில் நடந்தது. பின்னர் சார்லஸ் அண்டர்ஸ் பியர்ஸ் (Charles Anders Pierce) எனும் தத்துவ ஞானி இச் சைகை மொழிகளை ஆய்ந்து சீர்படுத்தினார். 1946 ஆம் ஆண் டில் மோரிஸ் (Morris) என்பார் இப்பொருளமைப்பியலை முப் பெரும் பிரிவுகளாகப் பிரித்தார். (1) தனிப் பொருளமைப்பியல்

(Pure Semiotics) (2) விளக்கப் பொருளமைப்பியல் (Descriptive Semiotics), (3) பொறுத்து பொருளமைப்பியல் (Applied Semiotics) என்பவைகளாகும்.

சைகைகளின் பொதுத் தன்மைகள், இயக்க முறைகள் முதலியனவற்றை தனிப் பொருளமைப்பியலில் காணலாம். ஒவ்வொரு சைகைகளையும் கலாச்சாரம் பண்பாடு சூழ்நிலை இவைகளைக் கொண்டு ஆய்ந்து அறிந்து கற்றலே. விளக்கப் பொருளமைப்பியலாகும் இச் சைகை மொழியறிவின் பயனுக மற்ற துறைகளில் ஏற்படும் பயன் பற்றியதே பொறுத்து — பொருளமைப்பியலாகும். இம்முப்பெரும் பிரிவினுல் பொருளமைப்பியல் விரிவு பெற்று பல்வேறு நிலைகளில் ஆய்வுக்கு உட்பட்டு வளர்ந்து வருகிறது. தந்தி துறையினரின் செய்திபோக்குவரத்துக்கு சாதனமாக உள்ள தட்டொலி அமைப்பு தனக்கென ஓர் அமைப்பினைக் கொண்டு சரிவர இயங்கி வருகிறது. அவ்வாறே கப்பல் துறையினர் கொடி அமைப்பு மற்றும் ஒலி மூலம் நடத்துகின்ற செய்திப் போக்கு வரத்தும் தனக்கென குறிப்பிட்ட அளவோடு ஓர் அமைப்பினை வைத்துக்கொண்டு இயங்கி வருகிறது. உடலசைவால், அங்கவமைப்புகளால் நடக்கின்ற செய்திப் போக்குவரத்தும் ஓர் பொது அமைப்பினை கொண்டு சில பொதுவான விதி முறைகட்கு உட்பட்டு இயங்குவதாக அறிஞர்கள் கருதுகிருர்கள். இம் மெய் மொழி (Body - language) ஆய்வினை மெய் மொழியியல் (Kinesics) என அழைக்கின்றனர். அண்மைக் காலமாக இம் மெய் மொழியியலில் மேலை நாட்டினர் அதிக ஆர்வம் காட்டி பல்வேறு நிலைகளில் மெய் மொழியியலினை ஆய்ந்து வருகின்றனர். மெய் மொழி என்பது கண் அசைவுகளையும் புன்னகை புரிவதையும். தலையினை அசைப்பதையும் நாம் உட்கார்ந்து நின்று செய்கின்ற உடலசைவுகளையும் கொண்டு நாம் ஏதோ ஒன்றை — ஒரு கருத்தை வெளியிட்டபடி இருக்கிருேம். நம்முடைய எந்த உடலசைவும் பொருளின்றி இருப்பதில்லை ஆனுல் நாம் வெளியிடுகின்ற கருத்து தேவையான மற்றொருவருக்கு போய் சேர்ந்து அவரும் தம் உடலசைவுகளால் நம்முடன் தொடர்பு கொள்ளத் தொடங்கின் மெய்ம் மொழி செய்தித் தொடர்பு போக்கு வரத்து மிக அழகாக நடந்தேறும் சான்ருக. ஒரு நிகழ்ச்சியினை எடுத்துக் கொள்வோம். ஒருவன் ஒரு பெண்ணை நாள்தோறும் பின் தொடர்கிருன் என்று வைத்துக்கொள்வோம் தொடக்கத்தில், அந்த பெண் தன்னை ஒருவன் தொடர்கிருன் என்பதால் எந்தவித புறபாதிப்புமின்றி போய் வருவாள். சில நாட்கள், இவ்வாறு

அந்த பெண் போய் வருவதும் இவன் பின் தொடர்வதும் நடைபெறும். அந்த பெண்ணுக்கு இவன் மீது விருப்பம் இருப்பதாக இருந்தால், காலப் போக்கில் அவளது ஆடை அலங்கார முறைகளிலும், நடையிலும், ஒருவித புது மாற்றங்கள் ஏற்படும். அந்த பெண் அவனது வரவை ரசிப்பதால் தன் அழகு அவனை தன் பின்னால் வரவழைத்துள்ளதால் அலங்காரத்தில் அதிக கவனம் செலுத்தி தன்னை மேலும் அழகுபடுத்திக் கொள்வாள். மெய்ம்மொழி மூலம் அவன் வரவை அவள் அனுமதிக்கிறாள் என்று பொருள். ஆயினும் அலட்சியமாக செல்வது போல பாவனை செய்து அவன் பின் தொடர்வதால் தன்னிடம் எந்தவித புறபாதிப்பும் ஏற்படவில்லை என்பது போல நடந்து கொள்ள முற்படுவாள். பின் தொடர்கின்றவனும் இவைகளைக் கவனித்தபடிதான் இருப்பான். இதுவரை, தான் பின் தொடர்வதை அவள் வெறுக்கவில்லை என்பதால் ஒருவித உற்சாகத்தால் உந்தப்பட்டு சம்மதமே என நினைத்து ஒரு நாள் அவளைப் பார்த்து அவன் புன்னகை புரிவான். 'லேசாக' முதல் நாள், தன் சிரிப்பிற்கு பதில் கிடைக்கவில்லையாயினும் பின்னர் ஒரு நாள் அவளும் சிரிப்பாள். "உன்னை நான் விரும்புகிறேன். அதனால்தான் நான் உன்னை பின் தொடர்கிறேன்" என அவன் தன் சிரிப்பால் மெய்ம் மொழியால் கூற, "நீ பின் தொடர்வதை நான் விரும்புகிறேன். நானும் உன்னை விரும்புகிறேன்" என்று பொருள்பட மெய்ம் மொழி மூலம் அவளும் சிரிப்பாள். பின்னர்தான் பேச்சு மொழி தொடர்கிறது. மெய்ம் மொழி மூலம் கருத்துப் பரிமாற்ற செய்திப் போக்குவரத்து நாள்தோறும் நம்மிடையே பல்வேறு நிலைகளில் இவ்வாறு நடைபெற்று வருகிறது.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது தமிழகப் பழமொழிகளில் ஒன்றாகும். உண்மையில் இதன் பொருள், ஒருவனது உள்ளத்தின் உணர்வுகளை — கருத்துக்களை, முகத்தில் காணலாம். ஒருவன் வெளியிடுகிற மெய்ம்மொழி அவனது அகத்தின் வழியாக — அகத்தின் மொழியாக முகத்தில் தெரிகிறது என்பதேயாகும். உன் மூஞ்சியைப் பார்த்தாலே தெரியுதே, நீ தப்பு பண்ணிட்டேன்னு என்று பலர் சொல்வதை (நம்மைப் பார்த்தல்ல) நாம் கேட்டிருக்கிறோம். "நான் தவறு செய்யவில்லை என்று அவன் கூறினாலும் அவன் முகமோ குற்றம் செய்தவனாக காட்டுவதால் தான் இவ்வாறு கூறிட நேருகிறது. உணர்ச்சிகளின் வெளிப்பாடு உடலில் தோன்றும்போது அவைகளை எளிதாக மறைத்துவிட இயலாது. நாம் உணர்ச்சிகளால்

உந்தப்படும்போது நம் அங்க அசைவுகளில் மாற்றங்கள் ஏற்படும். இம்மாற்றங்கள் நம் உணர்ச்சியினை—நம்—கருத்தை—நம் நினைப்பை — மற்றவர்களுக்குக் காட்டி கொடுத்து விடும். நம் உடலில் ஏற்படும் அங்க அசைவுகள் கணக்கற்றவை அவைகள் நமக்கு வெளியிடும் செய்திகளும் கணக்கற்றவை. ஒரு மனிதனின் நடையிலிருந்து அவன் ஏதோ அவசர காரியமாக போகிறான் என்பதும் எதையோ சிந்தித்தவண்ணம் நடந்து போகிறான் என்பதும் அவன் சொல்லாமலேயே நமக்கு விளங்குகிறது. நாம் எப்போதும் நம் அங்க அசைவுகளால் சில செய்திகளை மற்றவர்களுக்கு வழங்கிக் கொண்டேயிருக்கிறோம்; அச்செய்திகளை அறிந்து மற்றவர்களும் நம்மோடு தொடர்பு கொள்வதும் உண்டு. அல்லது மற்றவர்களுக்கு அது வெறும் செய்தியாக மட்டுமே நின்று விடுவதும் உண்டு ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று ஒரு வட்டகம் (Zone) அமைத்து வாழ்கிறான். இவ்வட்டகப் பரப்பு (Zonal territory) சூழ்நிலை, தகுதி, இடம், இவைகளுக்குத் தகுந்தவாறு மாறுபட்ட வண்ணமிருக்கும். ஆயினும் ஒவ்வொரு நிலையிலும் இவ்வட்டகப் பரப்பு அதற்குரிய மனிதனைப் பற்றிய செய்திகளை நமக்கு வழங்கிக் கொண்டேயிருக்கும். சூழ்நிலை. இவ்வட்டகப் பரப்பு விலங்கினங்களுக்கும் இருக்கிறது என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். காக்கைகள் (வரிசையாக) அமரும்போது கூட ஒவ்வொன்றிற்கும் சற்று இடை வெளியிட்டு அமர்வதைக் காணலாம். தவறுதலாக, ஒரு காக்கை சற்று நெருக்கமாக அமருமானால், மற்ற காக்கையின் வட்டகத்தில் ஊடுருவல் ஏற்படும், அத்தகைய வட்டக ஊடுருவலால் பாதிக்கப்பட்ட காக்கை, ஊடுருவிய காக்கையினைத் துரத்தும் நாம் சேவல் — சண்டை நடப்பதை பார்த்திருக்கலாம். ஒரு சேவல் மற்றொரு சேவலைத் தாக்காது ஒன்றையொன்று பார்த்தபடியே இருக்கும் அப்போது சேவலின் உரிமையாளர் அதனை மற்ற சேவலுக்கு நெருக்கமாகத் தள்ளுவார். அடுத்த சேவல் இதனைத் தாக்க சண்டை ஆரம்பமாகும். ஒரு சேவலின் வட்டகப் பரப்பில் மற்றொரு சேவல் ஊடுருவியதால்தான் இந்த தாக்குதல் நடக்கிறது.

படமெடுத்து நிற்கின்ற பாம்புகூட அது கணித்து வைத்திருக்கின்ற அதன் வட்டகப் பரப்பில் நாம் நுழைந்து விட்டால்தான் அது நம்மை கொட்டுகிறது இல்லையெனில் நம்மை பார்த்தவாறே இருக்கும். ரயிலில் ஏற காத்திருக்கும் அறிமுகமில்லாத மனிதருக்கு வெகு அண்மையில் நாம் போனால், அவர் நம்மை முறைத்துப் பார்த்து ''என்ன செய்தி'' என்று சந்தேகத்தோடு வினவுவார். ஆனால், அதே மனிதர் ரயிலில் ஏறும்

போது தனக்கு வெகு அருகில் நிற்கும் மனிதனை விசாரிப்பதில்லை ரயிலில் கூட்டத்தோடு நிற்கின்ற அவர் தனக்கு அண்மையில் நிற்கும் மற்றவர்களை முறைத்துப் பார்ப்பதில்லை. ஆயினும் அக்கூட்டத்திலும் நியாயமான நெருக்கத்தை விட வெகு நெருக்கமாக அவருக்கு அருகில் சென்றால் மீண்டும் அவர் நிச்சயம் முறைத்துப் பார்ப்பார். காரணம், அம் மனிதரின் வட்டகப்பரப்பு. ரயிலில் ஏறும் முன் இருந்ததை விட ரயிலில் ஏறி கூட்டத்தில் இருக்கும்போது சிறியதாகி விடுகிறது. இவ்வாறு சூழ்நிலைக்கு ஏற்ப வட்டகப் பரப்புகள் குறைந்தும் பெருகியும் வேறுபட்ட வண்ணம் இருக்கின்றன.

வீதியில் ஒரு ஆணும் — பெண்ணும் நடந்து செல்கிறார்கள். அவர்கள் நடந்து செல்லும் விதத்திலும், அவர்களுக்கு இடையிலுள்ள இடைவெளியினைக் கொண்டும் அவர்கள் இருவரின் உறவை நாம் ஏறக்குறைய சரிவர கணித்துவிட முடியும். இக் கணிப்பில் அனுபவமிக்க சிலர் "இவர்கள் கணவன்—மனைவி", "இவர்கள் காதலர்கள்," "இவர்கள் இப்பேர்ப்பட்டவர்கள்" என்று கணிப்பதை நாம் அன்றாட வாழ்வில் காண்கிறோம். இவ்வட்டகப் பரப்பினை அடிப்படையாகக்கொண்டு ஒரு அலுவலகத்தில் கூட ஒருவரின் தகுதியினை தாம் கணித்து விடலாம். அகலமான மேஜையும், நாற்காலியின் சொகுசான அமைப்பும் தகுதியினை எடைபோட உதவுகிறது. ஒரு மனிதனின் அலுவல் தகுதியினை அடிப்படையாகக் கொண்டு அவனது வட்டகப் பரப்பு அகன்று விரிந்து இருக்குமாதலால், அம் மனிதனுக்கு தரப்படுகின்ற மேஜையின் பரப்பும் அறையின் பரப்பும் அதற்கேற்ப அமையும். தனி அறையில் அமர்ந்திருக்கும் மனிதனுக்கு அலுவலகத்திலிருக்கும் தகுதியினைப் பொறுத்தே அவ்வறையின் பரப்பும் அமைப்பும் அமைந்திருக்கும். அந்த அறையின் நுழை வாயிலில் இருக்கும் திரைச்சீலை, வெள்ளைக் கண்ணாடி (Plain Glass), மறைக் கண்ணாடி (Frested Glass) முதலியன அரைக் கதவுகள் (Half - doors) முதலியன; தகுதிக்குத் தகுந்தவாறு மாறுபட்ட வண்ணமிருக்கும். ஒரு அலுவலக இயக்குநர் அறையில் ஒரு அலுவலக கணக்கர் நுழையும் போது அறைக் கதவினை மெல்லத் திறந்து கொண்டு போய் நிற்பார், இயக்குநர் பார்வைபட்டு "வா" வென்று அழைக்க கணக்கர் அருகே போவார். இயக்குநரின் வட்டகப் பரப்பினில் அனுமதியின்றி நுழைய இயலாத நிலை கணக்கருக்கு இருக்கிறது. கணக்கருக்கும் இயக்குநருக்கும் உள்ள இடைவெளி அவர்களின் தகுதிக்கு இடையிலிருக்கும் இடை வெளியினைப் பொறுத்தேயிருக்கும். ஒரு வேளை அந்த இடைவெளி தகுதிக்கு

உட்படாது போயின், வேறு சில நெருக்கங்களால் கணிக்கப் பட்டு இயங்கும்.

சாதாரண நிலையில் தன்னைவிட உயர்ந்த தகுதி உடை யோரின் வட்டகப் பரப்பினில் நுழைய ஒருவருக்கு அனுமதி தேவைப்படுகிறது. ஆனால், வேறொருவரிடம் தொலைபேசி மூலமோ அன்றி நேரிலோ கணக்கர் பேசிக்கொண்டிருந்தாலும் கூட மேலதிகாரி எந்தவித முன்னறிவிப்புமின்றி நேரே அவ ரது மேஜைக்கு வந்து கணக்கரின் வட்டகத்தில் உரிமையோடு ஊடுருவ, கணக்கர் அதன் காரணமாக தொல்லையுற்று அப் பேச்சுத் தொடர்பினை துண்டித்துக் கொண்டு தன்னுடைய மேலதிகாரியிடம் தொடர்பு கொள்வார். இவ்வாறு, வட்டகப் பரப்பினில் ஊடுருவுதல் தகுதியின் பாற்பட்டுள்ளது தனக்கு இணையான ஒரு மனிதரை சந்திக்கும்போது அவர் கவனம் தன்பக்கம் திரும்பும் வரை காத்திருந்து பிறகு அவரோடு பேசத் தொடங்குகிறான். அப்படிக் காத்திருப்பது தன் ஊடு ருவலை அவன் அங்கீகரித்து கொள்வதற்காகவும், அவன் தன் பக்கம் திரும்புதல் அந்த அங்கீகரிப்பினை தனக்கு புலப்படுத்தலு மாகும். ஒருவரின் மேஜைமீது அவனுடைய மேலதிகாரிகைகளை ஊன்றிக்கொண்டு உடலையும் முன் தள்ளி பேசலாம் அவ்வாறு பேசுவார் ஆனால் மேலதிகாரியின் வட்டகத்தில் அமைதியோடு நுழைந்தும், மேலதிகாரியின் முன் அவருடைய கணக்கர் அவ சியமற்றபடி மேஜை மீது கைகளை ஊன்றாமல் உடலை முன் தள்ளாது உரையாடியபடி இருப்பார். இவ்வாறு ஒவ்வொரு மனிதனும் தன்னியல்பாக தன் வட்டக பரப்பினை அறிந்து போற்றி பாதுகாத்து வருகிறான்.

ஒரு வகுப்பறையில் மாணவர்களுக்கு இடையே இடை வெளி இருப்பதை நாம் அறிவோம் — கண்கூடாகவும் காண லாம். இந்த இடைவெளி சாதாரண நிலையில் சுருங்கும்போது மாணவர்கள் மற்றும் வகுப்பாசிரியரின் கவனம் தன்னிச்சை யாகவே ஈர்க்கப்பட்டு விடுகிறது. மாணவர்களின் இருக்கை களுக்கும் ஆசிரியரின் இருக்கைக்கும் இருக்கைகளில் வேறு பாடும் இடைவெளியும் உண்டு. அவ்வாறே ஆசிரியர்களுக் கும் தலைமையாசிரியருக்கும் இருக்கிறது. இவைகள் தகுதியின் பாற்பட்ட வட்டகப் பரப்பின் வேறுபாடுகளால் அமைந் துள்ளன.

ஒரு அரசியல் தலைவரின் தகுதிக்கேற்ப கூட்டத்திற்கான மேடைகள் அமைக்கப்படுவதை நாம் காணலாம். மேடையின் உயரமும் பரப்பளவும் அரசியல்வாதியின் தகுதிக்கேற்ப பெரு

கிக் கொண்டே போகும். இம்மெய் மொழியியலறிவின் வாயிலாக ஒருவரின் அறையில் மற்றவர் நுழைகின்ற விதத்திலிருந்து கூட அவர்கள் இருவருக்கும் உள்ள தொடர்பை அறியலாம். டாக்டர் எட்வர்டு ஹால் (Dr Edward Hall) எனும் அறிஞர் இவ் வட்டகத்தின் தன்மைகளை மிக விரிவாக ஆராய்ந்து அவைகளை பாகுபடுத்தியுள்ளார் நெருக்க தூரம் (intimate distance), தனிப்பட்ட தூரம் (Personal distance), நியாய தூரம் (Social distance), பொது தூரம் (Public-distance) எனப் பாகுபடுத்தியுள்ளார் அவ்வறிஞர். ஒவ்வொரு மனிதனுக்கும் தனக்கென அமைத்துக்கொள்ளும் வட்டக அமைப்பினைப் போற்றி பாதுகாத்து வருகிறான். இவ்வட்டகப் பரப்பிற்கு எக்காரணத்தாலும் இடையூறோ அன்றி பாதகமோ ஏற்பட விடுவதில்லை அவ்வாறு தவிர்க்கமுடியாத நிலையில் இடையூறே அன்றி பாதகமோ ஏற்பட்டு விட்டால், அவன் நிலைகுலைந்து போய் விடுகிறான். அதனால்தான், சில குற்றவாளிகளை விசாரிக்கும்போது அவர்களுக்கு மிக நெருக்கமாக எந்தவித இடைவெளியுமின்றி நெருங்கி அமர்ந்து கேட்பதில் பலனிருப்பதாக உளவியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். ஏனெனில் அக்குற்றவாளியின் வட்டகப்பரப்பினை தாக்கி நின்று விசாரணை நடத்தும் போது தன் வட்டகப் பரப்பில் ஏற்பட்ட தவிர்க்க முடியாத ஊடுருவலால் குற்றவாளி பலவீனமடைந்துபோய் விடுகிறான். மெய்ம் மொழியியலில் ஒவ்வொரு அங்க இருப்பும் (Pose) நமக்கு ஒருவரின் நிலையை விளக்கும் பொருள் செறிவுடையதாக உள்ளது அண்மைக் காலமாக இம் மெய்ம் மொழியியல் அமெரிக்க மக்களிடை மிகப் பிரபலமடைந்து விஞ்ஞான அடிப்படையில் பல ஆய்வுகட்கு உட்பட்டு வளர்ந்து வருகிறது இம் மெய்மொழியியல் எல்லா நிலைகளிலும் பொருந்தாது போய் விட்டாலும் மனிதனின் உணர்ச்சிகள் அனைத்தும் உடலால் வெளிப்படுகிறது. என்பது மட்டும் உண்மையாகும். காலத்தாலும் சமுதாய கலச்சார பின்னணியாலும், சூழ்நிலை இவற்றிற்கு தகுந்தவாறும் மெய்யால் வெளிப்படும் உள்ளுணர்ச்சிகளின் கணிப்பு மாறுபடும், ஆயினும், தகுந்த பயிற்சியும் ஆழ்ந்து ஆய்ந்தறிந்த அனுபவமும் இருக்குமானால் நம் கணிப்பு சரியாகி அமைந்து விடும். அவ்வாறு அமையுமாயின், மெய்ம் மொழி ஆய்வு, 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' எனும் நம் பண்டை மொழியின் பொருள் பொதிந்த உண்மையினை உலகுக்கு எடுத்துரைக்கும் என்பதில் ஐயமில்லை

நன்றி : இக்கட்டுரை "Julius Fast" என்பவர் எழுதிய "Body language" எனும் நூலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாகும்.

சிலம்பு புலம்புகிறது.

பேராசிரியர். கோ. தெய்வநாயகம், எம். ஏ., பி. எசி. டிப்-இன்-அக்.

முன் இதழின் தொடர்ச்சி.

சிலம்பு புலம்புகிறது வஞ்சிக் காண்டத்து முதலடுத்த காதை யாம் காட்சிக் காதையில் வாய்வாட் கோதையாஞ் சேரன், இளங்கோ வேண்மாளுடன் "விளங்கில வந்தி வெள்ளிமாடத்து இருந்து", "துஞ்சா முழவின் அருவி ஒலிக்கும் மஞ்சுசூழ் சோலைமலை காண்குவம்" என்று கூறி வஞ்சி முற்றம் நீங்கிச் சென்றான். அதாவது அக நகரினின்றும் புறப்பட்டு மணிமேகலை காட்டிய வஞ்சிமாநகரின் புறப்பகுதிக்குப் போதருகின்றான். இது

"விளையாட்டு விரும்பிய விறல்வேல் வானவன்
பொலம்பூங் காவும் புனல்யாற்றுப் பரப்பும்
இலங்குநீர்த் துருத்தியும் இளமரக் காவும்
அரங்கும் பள்ளியும் ஒருங்குடன் பரப்பி ..
பெருமலை விலங்கிய பேரியாற்றடை கரை
இடுமணலெக்கர் இயைந் தொருங் கிருப்ப"
(25: 11—23)

என்னும் தொடர்களால் விளக்கப் பெறுகின்றது

இச்சிலம்பின் புறநகர்ப்பகுதி மணிமேகலை காட்டிய புறநகர்ப் பகுதியோடு ஒத்துள்ளமையினை மீண்டும் காண்போம் அது

"தேவகுலமும் தெற்றியும் பள்ளியும்
பூமலர்ப் பொழிலும் பொய்கையு மிடைந்து
நற்றவ முனிவரும் கற்றடங் கினரும்
நன்னெறி காணிய தொன்னூற் புலவரும்
எங்கணும் விளங்கிய எயிற்புற மிருக்கை"
மணி (26: 72 — 76)

எனும் பகுதியேயாம்.

சாத்தனாரே இதுபோல் வஞ்சி நகரத்து எயில்களுக்குப் புறத்தேயுள்ள தேவகுலத்தையும், தெற்றியையும் பள்ளியையும், பூமலர்ப் பொழிலையும் பொய்கையையும் குறித்து. வஞ்சிச் செலவின் இடையே பெற்றோரைக் கண்டபின், அறவணர்பால் அறவுரை கேட்க வஞ்சிநகர் நோக்கி (வஞ்சியின் அகநகர்)

வரும் மணிமேகலை நெடுவேள் குன்றத்திற்கும், வஞ்சியின் அக நகர்க்கு அரணாயிருக்கும் மதில்களுக்கும் இடைப்பட்ட வெளி யினைக் கடந்த பிறகே வஞ்சியின் அகத்தினுள் புகுந்ததாகக் கூறுகிறார். எனவே எவ்வாற்றானும் கண்ணகி கோட்டம் வஞ் சிக்குப் புறத்ததாகவே சாத்தனாராலு மோதப்பட்ட தறிக.

அருவிகள் ஒலிக்கும் மலையினின்றும் இழிந்து வருகின்ற பேரியாற்றின் எக்கர்ப் பகுதியிலே, மலைவளங் காணச்சென்ற மன்னவன் அமர்ந்து இயற்கையினைத் துய்க்கின்றான். அவன் அகநகரினின்றும் இப்பகுதியடையக் கடந்து வந்த தொலைவு மணிமேகலை கண்ணகி கோட்டத்தினின்றும் வஞ்சியின் எயிற் புறங்களை அடைவதற்குள் கடந்து வந்த அதே இடைவெளியே யாம் எனவே மலையிலிருந்து பேரியாறு இழிந்துவரும் நிலப்பகுதி வஞ்சி மாநகரின் புறநகர்ப் பகுதியே என்பது புலனாகின்றது

நெடுவேள் குன்றம் இம்மலைத் தொடரின்கண் உள்ள ஒரு மலையே நெடுவேள் குன்றமாகும். பாண்டிய நாட்டுக் கம்பம் பள்ளத்தாக்கிற்கு மேற்கிலும் சேர நாட்டுக் கோட்டயம் பரப் பிற்குக் கிழக்கிலும் தெற்கு வடக்காக நீண்டு பரந்து நாட்டு எல்லையரண்களாயிருந்த அம்மலைத் தொடரில் ஒன்றின் மீது தான் கண்ணகியார் பாண்டிய நாட்டினின்றும்,

"உரவுநீர் வையை ஒருகரைக்கொண்டு"

மேற்கு நோக்கி இரவும் பகலு மறியாது நடந்து

"நெடுவேள் குன்றம் அடிவைத்தேறிப்
பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழ்"

நின்று பதினான்கு நாட்கள் நிறைந்த நிலையில் இயற்கை மேவினார்.

இவ்வகைச் சான்றுகள் அப்படியே இன்றுமிருப்பதை இடை யறாத முயற்சியால் கண்டுரைத்த பேராசிரியர் சி கோ. அவர் களின் கருத்தினையும் காட்சியுரையினையும் பின்பற்றிய அறிஞரு லகம், இதனைக் கண்டு வியந்தது ஒரு புறமிருக்க, இன்னும் ஒரு சில தமிழறிஞர் அறியவில்லை என்பது உண்மையில் தமிழர் வருந்த வேண்டிய சூழலே.

பூவா வஞ்சிப் புறம்

"சுருளிமலை மீதில் மேவும் சீலா — உன்னைத்
தோத்தரித் தேன் சுப்ரமண்ய வேலா"

என்ற பிற்காலப் பாடல்கூறும் சுருளிமலைத் தொடரில்தான் ஒரு தாழ்வரையில் கண்ணகியார் இறந்தார். கண்ணகியார் துறக்கவுலகம் புக்கதைக் குன்றக் குறவரும் கண்டு நின்றனர் இதனை

" வானவரும் நெடுமாரி மலர் பொழிந்து
குன்றவரும் கண்டுநிற்பக் கொழுநனொடு
கொண்டு போயினர் " (24 : 8—9)

எனும் குன்றக் குரவைத் தொடர்கள் வலியுறுத்துகின்றன.

அக்குறவர்கள் மலைவளங் காணச் சென்றிருந்த சேரன் செங்குட்டுவனுக்கு மலைபடு பொருட்களைக் கையுறையாகத் தந்து பின்தாங் கண்ட அருங்காட்சியினை

" கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்முலை இழந்து தனித் துயரெய்தி
வானவர் போற்ற மன்னொடுங்கூடி
வானவர் போற்ற வானகம் புக்கனள் "
(25 : 57—60)

என்று உம்பர்கள் போற்றுமாறு கண்ணகியார் கணவனொடு கூடி வானகம் புக்கனர், வானவர் — அஃதாவது சேரனாட்டு மக்களில் ★ வானவர்கள் எனச் சிறப்பாக அழைக்கப் பெறுகின்ற மலை வாழ் மக்கள் அதாவது குன்றக் குறவர்கள் வாழ்த்திப் போற்று மாறு கணவனொடு கூடி வானகம புக்கனர் எனும் செய்தியைக் குறித்தனர்

முதன் முதலில் கண்ணகியாரைத் தெய்வமாகப் போற்றி வணங்கியவர்களும் இக்குறவர் தாம் என்பதனை

" இவள் போலும் நங்குலக்கோர் இருந்தெய்வம்
இல்லையாதலால்
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடியீரே "
(24 : 10 — 11)

எனும் பகுதி செப்பும்.

செய்தி கேட்ட மன்னன் தன் தேவியிடம் பத்தினித் தன் மையினைப் பற்றி வினவ, அவளும்

" நம் அகனாடு அடைந்த இப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும் "

★ இதுபற்றிய விளக்கமினிக் காண்பாம்.

எனக் கூறுகிருள். இதனுன் குன்றக் குரவர் வழிபடு தெய்வமாக் கொண்டுள்ள கண்ணகியாரைத் தாமும் வழிபடல் வேண்டும் எனக் கூறியமையறிக உடன் அரசன் நூலறி புலவரை நோக்கிக் கடவுண் மங்கலஞ் செய்யக் கருத்தறிகின்ருன். பின்

"......... மாபெரும் பத்தினிக்
கடவுள் எழுதவோர் கல்தாரா னெனின்
வழிநின்று பயவா மாண்பில் வாழ்க்கை
கழிந்தோ ரொழிந்தோர்க்குக் காட்டிய காஞ்சியும்
... பூவா வஞ்சிப் பொன்னகர்ப் புறத்தென்
வாய்வாள் மலைந்த வஞ்சி சூடுதுமென"
(25 : 129 — 134)

சூளுரைத்துப் பூவாவஞ்சிப் பொன்னகர்ப் புறமாம் பேரியாற்றடைகரையி லேயே வாய்வாள் மலைந்து வஞ்சி சூடினுன் சேரன் என மிகத் தெளிவாக அடிகள் குறிப்பர். எனவே பேரியாற்றடைகரை விளங் கும் நெடுவேள் குன்றத்தின் மேற்கத்தி சரிவு வஞ்சி மாநகரின் நகர்ப் புறப் பகுதியாம் என்பது மிக மிகத் தெளிவாகின்றது.

பின்னர் வடபுலச் செலவினை வென்றியோடு முடித்தபின் நெடுவேள் குன்றத் தாழ்வரையிலேயே கண்ணகியார்க்குக் கோட்டமுங் கடவுண் மங்கலமுஞ் செய்தமைத்து வழிபட்டான் என்பதனை

"அஞ் செஞ்சாய லஞ்சா தணுகும்
வஞ்சி மூதூர் மாநகர் மருங்கென்" (30 : 126—127)

எனும் மாடலன் கூற்ருலுமறிக இக் கோட்டமும் கடவுண் மங்கலஞ் செய்யப்பட்டவிடமும்

'வஞ்சி மூதூர் மாநகரின் மருங்" காகும் என மிகத் தெளி வாக, ஐயத்திற் கிடமிலாது இளங்கோவடிகள் வஞ்சி மாநகர்ப் புறப்பகுதியினைக் குறித்துச் செல்கின்ருர். எனவே சேரன் ஒரு நாளில் மலைவளங் கண்டு சென்ற செய்தி பற்றியும் ஒருவரும் ஐயுறுதற்கிடமில்லை. பிறகு அரசன்

"கூடார் வஞ்சிக் கூட்டுண்டு சிறந்த
வாடா வஞ்சி மாநகர் புக்கான்" (25 : 179—180)

சேரர் வஞ்சி 'சேரர் வஞ்சி' எனுநூல் இக்கருத்தினை வலி யுறுத்துவதோடு வஞ்சியைச் சுற்றியோடிய ஆறு ஆன் (ஆண்)

பொருநையாறு எனப்படும் பேரியாறே எனவும் தெளிவு படுத்து கின்றது. மேற்கு நோக்கி ஓடும் ஆறுதலால் ஆண் பாற் பெயர் பெற்றதென்ப. கிழக்கு நோக்கி ஓடிவரும் ஆறுகளுளொன்று பொருநை என்றே பெண்ணாகக் கருதப்படுமென்றுங் கூறுமந் நூல். இக் காட்சிகள்

"நெடியோன் மார்பிலாரம் போன்று"

விளங்கியதாகச் சிலம்பு கூறும். மேலும் இப் பேரியாற்றின் சிறப்பு

"வருபுனல் நீர்த்தண் பொருநை
சூழ் தரும் வஞ்சி" (29 : 14 வாழ்)

எனும் பகுதியாலும்

"மண்ணாள் வேந்தே நின் வாணாட்கள்
தண்ணான் பொருநை மணலினும் பலவே"
(28 : 125—126).

எனும் பகுதியினானும் நனி விளக்கப் பெற்றது.

நெடுவேள் குன்றமும் பேரியாறும் அருகருகேயுள்ளதோடு சிலம்பு காட்டும் அகச் சான்றுகள் அனைத்தும் இன்றைய நிலையிலும் நிலவியற்கை அமைப்பில் சற்றேனும் மாறவில்லை என்பது பேராசிரியர் சி. கோ. அவர்கள் வரலாற்றாய்வு வழியே கண்டு நிலைநிறுத்திய கருத்துக்களேயாம். எனவே தமிழனுக் கோர் தலைமையான உறுதியான வரலாறு கிட்டியது. இலக்கியத்தினை வரலாற்றாய்வு முறையில் ஆயும் நெறியும் புலப்படுத் தப்பட்டது. சேரன் செங்குட்டுவன் எடுத்த கண்ணகி கோட்டம் நெடுவேள் குன்றத்தின் மீதுதான் அமைந்துளது என்ற வரலாற்றுண்மையோடு சிலப்பதிகார வரலாற்றுச் செய்திகள் உண்மையானவையே வெறு மிலக்கியக் கற்பனையல்ல என்பதும் நிறுவப் பட்டது. இதனை அரிதின் முயன்றுரைத்த பேராசிரியர் கலைக் கதிரிலும் தமிழரசிலும், தமிழ் ஆங்கில நாளேடுகளிலும். பல கூட்டங்களிலும் பல்வேறுபட்ட ஐயங்களுக்கும் தெளிவு பிறக்கு மாறு விளக்கமாக எழுதியும், பேசியுமுள்ளார்கள் தமிழறிஞர் கோவை இளஞ்சேரனரவர்களும் இதுபற்றி மிகத் தெளிவாக மிகுதியாக விளக்கியுள்ளார்கள். என் பயன்? மீண்டும் எடுத் தியம்ப வேண்டி உள்ளது

கண்ணகி சென்றிறுதியுற்ற இடம்

மதுரையினின்றும் கண்ணகியார்

"கீழ்திசைவாயில் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசைவாயில் வறியேன் பெயர்கென
இரவும் பகலும் மயங்கினள் கையற்று
உரவுநீர் வையை ஒருகரைக் கொண்டாங்கு
அவலமெண்ணாள் அவலித் திழிதலின்
மிசைய எண்ணாள் மிசை வைத்தேறலின்."

எனும்படி அவலமுற்ற பாங்கில் அன்பனைக் கெடுத்தலமந்த ஆதிமந்திபோல

"கடல்வயிறு கிழித்து மலைநெஞ்சு பிளந்தாங்கு
அவுணரைக் கடந்த சுடரிலை நெடுவேல்
நெடுவேள் குன்றம் அடிவைத்தேறிப்
பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழோர்
தீத் தொழிலாட்டியேன் யானென்றேங்கி"

இருந்துபின்

"எழுநாளிரட்டி எல்லை சென்றபின்
தொழுநாளிதுவென தோன்ற வாழ்த்தப்
பீடுகெழு நங்கை பெரும் பெயரேத்தி
வாடா மாமலர் மாரி பெய்தாங்கு
அமரர்க் கரசன் தமர் வந்தேத்தக்
கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு
வானவூர்தி ஏறினள் மாதோ"

என்ற அடிகளால் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்படும் சேர நாட்டெல்லையில் நெடுவேள் குன்றப் பரப்பில் இறுதியுற்றார்.

ஆயின் கட்டுரையாசிரியர் திரு மெய்கண்டான் கண்ணகி யார் இறந்த இடம் பற்றித் தெளிவாக ஏதுங் கூறினாரில்லை. "சேரர் வஞ்சி" நூலாசிரியர் 'கண்ணகியார் நெடுவேள் குன்றத்தின் கிழக்குச் சரிவு வழியாக ஏறிப் பின் மேற்குச் சரிவு வழி இறங்கி மலையடியில் வேங்கை மரத்தினடியில் உயிர் துறந்தார்" எனக் கூறினும் 'நெடுவேள் குன்ற அளவில்' ஓரளவு திட்டப்படுத்தியே கூறுகிறார்.

தாழ்வரையில் பத்தினித் தெய்வம். குன்றக் குறவர்கள் மலை மேலேயே வாழ்ந்து வருவோர் ஆவர். மலைமீது வந்துற்ற

நிலையில் அயாவுயிர்த்து வேங்கை மர நீழலில் நின்றவம்பப் பெருந் தெய்வத்தினைக் கண்ணுற்று, மன நடுக்குற்ற நிலையில் அக்குறவர்கள்

"மலை வேங்கை நறுநிழலின் வள்ளி போல்வீர்
மன நடுங்க
முலையிழந்து வந்து நின்றீர் யாவிரோவென"
(24 : 2—3)

என "மலையின்கண் உள்ள வேங்கை மர நீழலில் உள்ளீரே" என வினவுவது கண்ணகியார் நின்ற இடம் மலைமீதுதான் என்பதைப் புலப்படுத்துகின்றது. இக் குன்றக் குறவர் மரபினர் இன்னும் 'பளிங்கர்' (புளிஞர்) எனும் பெயரோடு இம் மலைப் பகுதிகளில் வாழ்ந்து வருவது ஒப்பிட்டு அறியத்தக்கது. மேலும்,

"நிறங்கிளர் அருவிப் பறம்பின் தாழ்வரை
நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்
தெய்வங் கொள்ளுமின்" (24 : 13 — 15)

எனுந் தொடர்கள் ஒளி விளங்கும்படியான அருவிகள் கோடுகளினின்றும் இழிந்து விழும்படியான மலைப்பறம்பின் தாழ்வரையாம் மலையுச்சிப் பரப்பின்கண் விளங்கும் வேங்கை மர நீழலிலே கண்ணகியார் இறந்த இடத்திலேயே அவரைத் தெய்வமாக அக்குறவர்கள் கொண்டமையினை விளக்கி.

'தாழ்வரை' என்பது மலையின்மீது காணப்படும் பரப்பேயாம். 'தாள்வரை' என்பது மலையடிவாரமாகும். இதனை

"வரைத்தாள் வாழ்வேன் வரோத்தமை என்பேன்"
(11 : 115)

எனுங் காடுகாண் காதையடியாலறியலாம். தாழ்வரை பற்றிய விளக்கமான செய்திகளை எல்லாம் பேராசிரியர் சி. கோ. அவர்கள் தம் கட்டுரைகளில் மிகவிளக்கமாகக் கூறியுள்ளார்கள்.

சேரனுயர் சிலம்பின் பறம்பு நெடுவேள் குன்றப் பறம்பில் கண்ணகி கோட்டமுள்ளது என்பதனை,

"மங்கல மடந்தை கோட்டத் தாங்கண்
செங்கோட்டுயர்வரை சேணுயர் சிலம்பில்
பிணிமுக நெடுங்கற் பிடர்த்தலை நிரம்பிய
அணிகயம் பலவுள ; ஆங்கவை இடையது
கடிப்பகை நுண்கலுங் கவரிதழ்க் குறுங்கலும்
இடிக்கலப்பன்ன இழைந்துகு நீரும்
உண்டோர் சுனை" (30 . 53 — 59).

எனுந் தொடர்கள் விளக்கின.

இதன் கண் காணப்படும் சுனைகளும், சிகரங்களும் அமைந்துள்ள சூழல்

"நிறங்கிளர் அருவிப் பறம்பின் தாழ்வரை" யோடு ஒத்துள்ளமை காண்க. மேலும் இப்பகுதியில் குன்றக் குறவரும் வாழ்ந்து வந்தனர். இச் சூழலைக் குற்றால மலையில் "செம்பாகடவி" அருவி விழும் மலைப்பறம்பையும், கொல்லி மலைத் தொடரில் தாழ்வரையின் பறம்பில் பல ஊர்கள் உள்ள நிலைமையையும் அறிந்தவர்கள் மிக அருமையாக அறிந்து கொள்வர்.

எனவே இந்நெடுவேற் குன்றப் பறம்பின் தாழ்வரையின் கண் வேங்கை மரச் சோலை மட்டுமல்ல சிறிது தூரத்தில் நிறங்கிளர் அருவியும் வீழ்ந்தது. அதனண்மையில் அணிகயங்களும் பலவுள்ளன என்ற செய்தியும் புலனாயிற்று இதனானே குன்றக் குறவர் கண்ணகியாரை வழிபட்ட இடமும் அடிகளால் மங்கலதேவி கோட்டம் என்று சுட்டப்பட்ட இடமும் ஒன்றே என்பதனை உணர்க, இந் நிலவியற்கை காலத்தால் மாறவியலா ஒன்று என்பதனை இன்றளவும் காணப்படுகின்ற இச் சூழல் மிக அழகாக விளக்குந் தகைமையது.

இதனோடு மேலும் நமக்கோர் கருத்து அடிகளாரால் உணர்த்தப்படுகின்றது. அது "மங்கல மடந்தை கோட்டமே கண்ணகிக் கோட்டம்" என்பதாகும்.

தமிழ்ப் பேராசிரியர் மணிவிழா

பேரன்புடையீர்.

வணக்கம் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக 32 ஆண்டுகள் பணியாற்றிய முத்தமிழ் வித்தகர் திரு. வெ. ப கரு. இராமநாதன் செட்டியார் அவர்களின் மணிவிழா டிசம்பர் முதல் வாரத்தில் நடைபெற உள்ளது அவர்கள் தமிழுக்கு நீண்ட நெடுங்காலமாக ஆற்றிவரும் தொண்டும், எண்ணரிய புலமையாளர்களை உருவாக்கிய திறமும், தமிழிசைக்குச் செய்து வரும் பணிகளும் நாடு நன்கறிந்தன. அவர்கள் மணிவிழா இணைவேந்தர், டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப் பெறும். பேராசிரியர் அவர்களிடம் பயின்ற மாணவர்களும். அன்பு கொண்டவர்களும், தமிழறிஞர்களும் தமிழிசைவாணர்களும் விழாவில் கலந்து சிறப்பிக்க வேண்டும் என விரும்புகிறோம். எனவே பழைய மாணவர்களும் அன்பர்களும் அறிஞர்களும் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :—

டாக்டர் மெ சுந்தரம்,
நெறியாளர், உயர் தமிழியல் ஆராய்ச்சி நிலையம்,
தலைமைத் தமிழ்ப் பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி.
சென்னை — 600005.